**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 207/208**
**நாள்.09.10.2023**
**வா.சா.1- சுப்பையா**
**3 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

1. எனது பெயர் சுப்பையா. பாலகிருஷ்ணன் விற்ற சொத்து செல்லாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பாலகிருஷ்ணனின் மனைவி பெயர் ஜெயலட்சுமி என்றால் முதல் மனைவி பெயர் ஜெயலட்சுமி ஆகும். மேற்படி ஜெயலட்சுமி, பாலகிருஷ்ணன் தம்பதியினருக்கு 2,10,11,12,13,14,15 பிரதிவாதிகள் மக்கள் என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை எப்போது விற்றார் என்றால் 16.06.1988ம் தேதி விற்றார். நான் பத்திர எழுத்தராக வேலை பார்த்து வருகிறேன். எனது லைசன்ஸ் எண். A/2/PLN/1998 ஆகும். மேற்படி லைசன்ஸ்ல் எனது பெயர் பி.சுப்பையா என உள்ளது. நான் 27.03.1965ம் தேதி பிறந்தேன். வா.சா.ஆ.2 பத்திரம் ஏற்படுத்தப்பட்ட போது நான் மேஜராக இருந்தேன் என்றால் சரிதான். நான் மேஜர் என்பதால் தாவா சொத்துக்களை பாலகிருஷ்ணன் விற்பனை செய்தது எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 பத்திரம் ஏற்படுத்தப்பட்ட போதே அதன் விபரம் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கான அறிவிப்பு அனுப்புவதற்கான விபரங்களை யார் கூறினார்கள் என்றால் பாலகிருஷ்ணனின் வாரிசுகள் அனைவரும் தான் விபரங்களை வழக்கறிஞரிடம் கூறினார்கள். பாலகிருஷ்ணன் 1988ம் ஆண்டு 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதால் அப்போதே அதை ஆட்சேபித்து 3 வருடத்திற்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும், காலம் கடந்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

2. பாலகிருஷ்ணன் 2008ம் ஆண்டு இறந்துவிட்டார். பாலகிருஷ்ணன் உயிருடன் இருந்த சமயத்தில் 2002ம் ஆண்டு பாலகிருஷ்ணன் குடும்பத்தார்கள் ஒரு பாகவிஸ்தி பத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகவிஸ்தி பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 09.02.2007ம்

தேதி பாலசுப்பையாவுக்கு, பாலகுமார் என்பவர் வடமதுரை பதிவு எண்.442/2007 ஆக செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில் மெண்ட் பத்திரப்படி வடமதுரை கிராம புல சர்வே எண்.1398/2 க்கு கட்டுப்பட்ட 2 ஏக்கர் 57 செண்டில் வடகிழக்கு பக்கம் செண்ட் 87 ல் தென்புறம் 6120 சதுரடி எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் சீனியர் பத்திர எழுத்தர் என்பதால் பத்திர விபரங்கள், வில்லங்க விபரங்கள் பற்றி நன்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி 09.02.2007 ம் தேதி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை பாலக்குமார் என்பவர் எனக்கு எழுதிக்கொடுத்தார். மேற்படி சொத்தை நான் 07.07.2017 ம் தேதி சந்திரசேகர் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டேன். மேற்படி தானசெட்டில் மெண்ட் பத்திரத்தில் 29.04.2002 ம் தேதி பாலகிருஷ்ணன் குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகவிஸ்தியை பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. எனது தாயார் பெயர் ரெங்கநாயகி. அவர் வேலாயுதம்பாளையத்தில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டவர் என்றால் சரியல்ல. ரெங்கநாயகியின் கணவர் பெயரும் பாலகிருஷ்ணன் என்பதால் பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள பாலகிருஷ்ணின் வாரிசு நான் இல்லை என்பதால் தான் 29.04.2002 ம் தேதி பாலகிருஷ்ணன் குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகவிஸ்தி பத்திரத்தில் நான் தரப்பினராக இல்லை என்றால் சரியல்ல. என்னை தரப்பினராக சேர்க்கவில்லை. பாலகிருஷ்ணன் உயிருடன் இருக்கும் வரை நான் எந்த நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாலகிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் பாகம் இருப்பதாக கேட்டு திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.153/2010 ல் வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கு வேடசந்தூர் சார்பு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அசல் வழக்கு எண்.18/2019 வழக்கு வருகையின்மை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

4. 29.04.2002 ம் தேதி பாகவிஸ்தி பத்திரம் செல்லாது என எந்த வழக்கிலும் பரிகாரம் கேட்கவில்லை என்றால் மேற்படி சார்பு நீதிமன்றத்தில் அதற்காக தான் வழக்கு

தாக்கல் செய்துள்ளேன். சார்பு நீதிமன்றத்தில் பாகவிஸ்தி ஆவணம் செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளேன் என்றாலும், பாகம் கேட்டு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பாலகிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் ஏற்கனவே கிரையம் செய்து கொடுத்த சொத்துக்கள் போக மீதமுள்ள சொத்துக்களை 03.03.2008ம் தேதிய பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.743/2008ன் படி S.R.R.Projects Pvt. Ltd., Hyderabad நிறுவனத்திற்கு பாலகிருஷ்ணனின் வாரிசுகள் கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் மூன்று பேர் தான் கிரையம் செய்து கொடுத்தார்கள். மேற்படி கிரையப்பத்திரத்தை நான் தான் எழுதினேன். மேற்படி கிரையப்பத்திரம் எழுதிய போது கிரையப்பத்திரத்தில் கண்டுள்ள சர்வே எண், நான்குமால், விஸ்தீரணம் பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும். மேற்படி கிரையப்பத்திரத்தை எழுதிய போது நான் வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் சொத்துக்கள் அனைத்தும் பாலகிருஷ்ணன் பெயரில் தான் இருந்தது.

5. மேற்படி கிரையப்பத்திரத்தில் 29.04.2002ம் தேதியிட்ட பாகவிஸ்தி பத்திரத்தை பற்றி குறிப்பிட்டு தான் எழுதியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 03.03.2008ம் தேதிய கிரைய பத்திரத்தை நான் எழுதிய பிறகு 13.04.2009ம் தேதி பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் ஏற்கனவே 03.03.2008ம் தேதி கிரையம் செய்து கொடுக்கப்பட்ட சொத்துக்களில் எனக்கும் ஒரு பாகம் உள்ளதாக குறிப்பிட்டு எனது மனைவி ஹேமலதாவை கார்டியனாக காண்பித்து B.S.ரவி சங்கர். B.S. சிவசங்கர் ஆகியவர்களுக்கு போலியாக எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 17.02.2010ம் தேதி ஏற்கனவே கிரையம் பெற்ற சொத்துக்களில் 2, 3 வாதிகளுக்கு 10ல் தலா ஒரு பங்கு பாகம் இருப்பதாக குறிப்பிட்டு மோசடியாக செட்டில்மெண்ட் பத்திரம் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. S.R.R.Projects Pvt. Ltd., Hyderabad நிறுவனம் எனது பெயரில் புகார் கொடுத்ததன் அடிப்படையில் திண்டுக்கல் மாவட்ட குற்றப்பிரிவு FIR No.60/2010 ஆக 05.05.2010ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, நான் நீதிமன்ற காவலில் இருந்தேன் என்றால் சரிதான். அதன் பின்னர் மேற்படி வழக்கு சம்பந்தமாக

ஏற்படுத்தப்பட்ட 13.04.2009ம் தேதி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்து கொடுப்பதாக கூறியதன் அடிப்படையில் தான் பிணையில் விடுவிக்கப்பட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கிற்கு பின்னர் 2, 3 வாதிகள் எனக்கு எழுதிக்கொடுத்த 17.02.2010ம் தேதிய செட்டில்மெண்ட் பத்திரத்தை 09.07.2010ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரம் மூலம் ரத்து செய்துவிட்டார்கள் என்றால் நான் சிறையில் இருந்த சமயத்தில் என்னை மிரட்டி மேற்படி பத்திரத்தை ரத்து செய்து விட்டார்கள். என் மீதுள்ள முதல் தகவல் அறிக்கையின்படி திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் சி.சி எண்.107/2011 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

7. 03.03.2008ம் தேதிய கிரையப்பத்திரத்தின் படி S.R.R.Projects Pvt. Ltd., Hyderabad நிறுவனத்தின் இயக்குநர் பாணிக்குமார், சந்திரா ரெட்டி என்பவருக்கு 10.03.2010ம் தேதி கிரையம் செய்து கொடுத்த கிரையப்பத்திரத்தையும் நான் தான் எழுதினேன் என்றால் சரிதான். மேற்படி பத்திரங்களை நான் எழுதியதால் தாவா சொத்துக்களில் 10ல் 3 பங்கு வாதிகளுக்கு இருந்திருந்தால் சொத்துக்களை பொறுத்து கிரயப்பத்திரத்தை நான் எழுதிக்கொடுத்திருக்க மாட்டேன் என்றாலும், நிறுவனத்திடம் இருந்து மோசடியாக பணம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் தான் நான் பத்திரங்களை உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல. சந்திரா ரெட்டியிடம் இருந்து 18.04.2011ம் தேதிய கிரையப்பத்திரம் மூலம் அழகர்சாமி என்பவர் கிரையம் பெற்று அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
R VANJI NATHAN
**Principal District Munsif**
**Vedasandur**